SREE Annapoorna SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# THE COVAI MAIL

ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

Covai | Chennai | Tirupur | Ooty | Coonoor | Kothagiri | Pollachi | Palani

Vol No. : 10 Issue No. : 23 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Sep 3-9, 2023, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேடரிங்



**Manimekalai Mohan,**
**Founder & Managing Trustee, SSVM**

# The best learning software ever produced is Curiosity!

*- Sonam Wangchuk, Educational Reformist*



*(From Left) Srisha Mohandoss, Director of Education, Manimekalai Mohan, Founder and Managing Trustee, SSVM, Kranti Kumar, Coimbatore District Collector, Lt General Ajai Kumar Singh, General Officer-Commanding-in-Chief, Southern Command of the Indian Army, Sonam Wangchuk, Director of the HIAL, Mohandoss, Secretary, and Nitin Jeyendran, Director of Infrastructure of SSVM Institutions in the 'Transforming India Conclave 2023' held at SSVM World School*

✍ Madhumitha, THE COVAI MAIL

SSVM Institutions recently hosted the second edition of the three-day "Transforming India Conclave 2023" with the theme "Unleash the Power Within You" at SSVM World School in Coimbatore.

The inaugural day welcomed dignitaries such as Manimekalai Mohan, Founder, Managing Trustee, Mohandoss, Secretary, Srisha Mohandoss, Co-Founder of Ruh Early Years and the Director of Education, Nitin Jeyendran, Director of Infrastructure of SSVM Institutions, along with esteemed guests including District Collector Kranti Kumar Pati, Lieutenant General Ajai Kumar Singh AVSM, YSM, SM, VSM, General Officer-Commanding-in-Chief (GOC-in-C) Southern Command of the Indian Army, and Sonam Wangchuk, Indian Engineer, Innovator, Educational Reformist and Director of the Himalayan Institute of Alternatives in Ladakh.

The event underscored the crucial role of India's youth in propelling the nation towards progress and prosperity. It featured over 16 workshops for students, covering subjects such as culinary skills, minimalistic living, and financial literacy, with an emphasis on encouraging students to pursue their passions for a stress-free life.

The conclave included thought-provoking speaker sessions, specially curated workshops, award ceremonies, and captivating entertainment acts scheduled throughout the three-day event.

Notably, students and teachers from all schools under SSVM Institutions were honoured with two prestigious awards: the "Studentpreneur Awards 2023" to encourage entrepreneurial spirit among students and the "Inspirational Guru Awards 2023" to recognize and celebrate teachers' dedication to shaping society's future.

## Seeds of Change

In her welcome address, Manimekalai Mohan said "Transformation begins with us—the students, the teachers, the parents, and the institutions. We often point our fingers at others and say, 'India must develop,' but it is we who must initiate change.

When taking the promotional video, the director made it clear that they did not want me to act but encouraged me to be myself. It was then I realized that all heroes are as they are, and that's why we have many heroes in our country".

Achieving transformation in India is undoubtedly a challenging endeavour, yet it becomes attainable through collective efforts. India has demonstrated that its knowledge is a formidable asset, often surpassing even the brightest minds in Silicon Valley.

"Why do we focus on transforming India at the school level?" she continued, "Because schools serve as the fertile soil in which we plant the seeds of change. These seeds will germinate into a generation capable of positively shaping the world. We must ensure that our students do not look back with regret regarding their choices; instead, they should confidently embrace the paths they choose."

> "Schools serve as the fertile soil in which we plant the seeds of change"

> "Challenging moments reveal our inner strength and resilience"

## A Journey of Discovery



Srisha Mohandoss shared insights on discovering one's inner strength. Also, she emphasized the importance of showcasing the remarkable capabilities of the students and asked them to embody adaptability, innovation, and the ability to inspire those around them.

Reflecting on the challenges of being a young student in India, she acknowledged, "It's during those challenging moments that we discovered our own strength and resilience." She highlighted the incredible stories unfolding in the auditorium, featuring student entrepreneurs and inspirational educators, who demonstrated that dreams, coupled with hard work, can lead to extraordinary outcomes.

Addressing the young students, Srisha encouraged them, "Embrace the unknown, be open to trying new things, and forge your own path without fear." She expressed gratitude to the teachers who ignited curiosity and ambition in the students.

"Let's continue writing stories of courage, and resilience and strive for excellence", she concluded.

## Path to India's Progress



In his inspiring address, General Singh highlighted India's remarkable journey, tracing its path from independence to its current status as a rapidly growing economic powerhouse. He touched upon various aspects of this journey, including digital transformation, infrastructure development, and more. He underscored the significance of personal transformation, mindfulness, gratitude, and the realization of one's inner strength.

General Singh commended the nation's progress with the words, "India has been great, is great, and will undoubtedly continue to be great." He also acknowledged the pivotal role of women in India's transformation, stating, "True power resides in the feminine, making the women of India integral to this journey."

He emphasized the importance of self-discovery by asserting, "I firmly believe that India's transformation can truly commence when each of us delve into the fundamental question, 'Who am I?'"

As a military leader, he expressed his pride in the Indian Army, noting, "Today, when the world wants to know about the attitude and relationship to warfare, they come to India."

> "True power resides in the feminine, making the women of India integral to this transformation journey"

## Empowering India's Youth



In his thought-provoking address, District Collector Kranti Kumar emphasized the importance of understanding India's journey and the role of its youth in shaping the nation's future. He stated, "As we understand the theme of today, how to transform India, it is very important to understand the idea of India, the journey we have taken till now."

Kranti Kumar acknowledged India's economic transformation, with the country on the cusp of achieving $5 trillion, and Tamil Nadu targeting a $1 trillion economy by 2030. He commended India's shift towards becoming a global manufacturing and services hub, thanked to its educational power and resources.

The District Collector urged students to think about innovative solutions to public policy problems, emphasizing the entrepreneurial spirit and the market's demand for unique solutions. "Every inconvenience you face is a business opportunity," he encouraged.

He concluded by addressing the need for sustainable development, urban challenges, and citizen participation in solving these issues.

> "Every inconvenience you face is a business opportunity"

> "Necessity is the mother of innovation"

## Call for Responsibility



Sonam Wangchuk's speech highlighted the urgency for individual responsibility and transformation in contemporary India. He emphasized that each person, be it students, teachers, or the entire education system, must tap into their inner potential to drive positive change.

Sonam draws inspiration from Ladakh, where despite daunting challenges, students managed to challenge and transform systems. He stated, "Necessity is the mother of innovation," underscoring how Ladakh's challenges have led to inventive solutions.

Sonam stressed the importance of curiosity as a built-in learning software, saying, "The best learning software ever produced is curiosity." He advocates pairing curiosity with empathy and initiative to effect meaningful change.

Sonam envisions three crucial changes for the country. Firstly, he aimed to revamp the education system, shifting away from outdated methods to prioritize planetary healing. Secondly, he calls for a redefinition of religion to discourage climate violence and the taking of human life.

Lastly, he concluded by emphasizing the value of simplicity in today's complex world, stating, "It is simple to be complicated and difficult to be simple." These changes reflect his vision for a more harmonious and sustainable society.

## குழந்தைகளுக்கு கைப்பேசி கொடுப்பதால்

# அவர்களின் பாதிப்புக்கு நாமே காரணமாகிறோம்

**- பி.எஸ்.ஜி விஷ்ணு கிராந்தி சிறப்பு பள்ளி இயக்குநர் பானுமதி**



✍ தி கோவை மெயில்

ஆட்டிசம் என்ற பிரச்சனையானது 100ல் ஒரு குழந்தைக்கு உள்ளது. இப்பிரச்சனையில் பெரிதும் பாதிக்கப்படுவது ஆண் குழந்தைகளே. இதனைப் பற்றி அறியாத பெற்றோர்கள் ஒரு காலகட்டத்திற்கு மேல் மனவருத்தத்திற்கு உள்ளாகின்றனர் என்று ஆட்டிசம் என்ற குறைபாட்டை பற்றி பி.எஸ்.ஜி விஷ்ணு கிராந்தி சிறப்பு பள்ளியின் இயக்குநர் பானுமதி விளக்கினார்.

மேலும் அவர் பேசுகையில், ஆட்டிசம் உள்ள குழந்தைகள் நம் கண்களை பார்த்து பேச மாட்டார்கள். நாம் அந்த குழந்தைகளை பெயர் சொல்லி அழைக்கும்போது அதற்கான எதிர்செயல் செய்யாமல் இருப்பார்கள். மற்ற குழந்தைகள் வயதிற்கு ஏற்ப செய்யும் செயல்களை இக்குழந்தைகள் செய்யமாட்டார்கள். இதுபோன்ற நடவடிக்கைகள் கொண்ட குழந்தைகளுக்கு ஆட்டிசம் உள்ளது என்று நம்மால் யூகிக்க முடியும்.

குப்புற படுத்தல், தவழுதல் எழுந்து நடத்தல் ஒரு குறிப்பிட்ட வயதில் மா, பா, தா, வா என்று உச்சரித்தல் போன்ற செயல்களை செய்யாமல் இருக்கும்போது பெற்றோருக்கு கவலையாக இருக்கும். பெற்றோர்கள் அலட்சியமாக இல்லாமல் இதற்கான ஆலோசகரை அணுக வேண்டியது அவசியமான ஒன்று. ஆலோசகரை அணுகாமல் இருப்பது நம் குழந்தைக்கு நாம் செய்யும் துரோகம் ஆகும். முன்பிருந்த காலத்தில் நாம் பல்லாங்குழி ஆடுதல், கோலமிடுதல் போன்ற செயல்களை செய்தோம். அதன் மூலம் விரல்களுக்கு உடற்பயிற்சி போன்ற செயலை கொடுக்க முடிந்தது. தற்போதுள்ள காலத்தில் கணினி, கைபேசி போன்றவற்றை அதிகம் பயன்படுத்துவதால் குழந்தைகளுக்கு இந்த ஆட்டிசம் பாதிப்பு அதிகமாக ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு கைப்பேசி கொடுக்காமல் இருப்பது நல்லது. குழந்தைகளுக்கு கைப்பேசி கொடுத்து நாமே அவர்களை பாதிப்புக்குள்ளாக்கிறோம்.

குழந்தைகளுக்கு மேலும் எழுத்து மயக்கம் அதாவது டிஸ்லெக்ஸியா என்ற ஒரு பாதிப்பும் ஏற்படும். இதனால் எழுத்துக்கள் சுற்றிச் சுற்றி வருவது போன்று குழந்தைகளுக்கு தோன்றும். சில குழந்தைகள் எழுதி பழகும் போது நாம் சொல்வது போல எழுத மாட்டார்கள். அதற்கான காரணம் அந்த குழந்தைகளுக்கு இந்த பாதிப்பானது இருக்கும்.

ஆட்டிசம், டிஸ்லெக்ஸியா பாதிப்பு குழந்தைகளுக்கு இருக்கிறதோ என்று தோன்றும் போது நீங்கள் இதற்கான ஆலோசகரை அணுக வேண்டும்.

இந்த பாதிப்பு உள்ள குழந்தைகளுக்கு பீகேவியர் தெரபி, ஸ்பீச் தெரபி, ஆக்குபேசனல் தெரபி, பிசியோ தெரபி போன்ற தெரபிகள் அளிக்கப்படுவதன் மூலம் அந்த பாதிப்பிலிருந்து சரி செய்யமுடியும். சிறுவயதிலேயே சரி செய்யாவிட்டால் எதிர்காலத்தில் அக்குழந்தைகளுக்கு அதிக பாதிப்பு ஏற்படும் வாய்ப்புள்ளது.

### பி.எஸ்.ஜி விஷ்ணு கிராந்தி சிறப்பு பள்ளி




பி.எஸ்.ஜி அறக்கட்டளையானது நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன் தலைமையில் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண விஷ்ணுகிராந்தி பள்ளியை நிறுவியுள்ளது. இங்கு நீங்கள் இந்த பிரச்சனைக்காக அணுகும் போது இங்கு தரப்படும் ஒரு படிவத்தை நிரப்புவதன் மூலம் உங்கள் குழந்தைக்கு ஆட்டிசம் உள்ளதா என்பதை கண்டறிய முடியும். அதற்கான தெரபியும் அளிக்கப்படும். இதன் மூலம் அந்த குழந்தைகளின் வாழ்க்கையை சீரமைக்க முடியும்.

ஆட்டிசம் உள்ள குழந்தைகளுக்கும், டிஸ்லெக்ஸியா உள்ள குழந்தைகளுக்கும் ரேமடியல் என்ற டீச்சிங் மூலம் எழுதும் மற்றும் படிக்கும் திறனை வளர்க்க முடியும். ஒரு வருடத்திற்குள்ளேயே இந்த பிரச்சனைகளுக்கு தீர்வும் காணமுடியும்.


இப்பிரச்சனை உள்ள குழந்தைகளுக்கு நியாபக சக்தி குறைவு என்பதால் ஒருவருக்கு ஒரு ஆசிரியர் என்பதன் மூலமே கற்றுத் தர முடியும். இதற்காக பி.எஸ்.ஜி கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ரேமடியல் டீச்சிங் முறையை கற்பித்து அந்த ஆசிரியர் மூலம் இக்குழந்தைகளுக்கு கல்வி கற்றுத் தர முடிகிறது. மேலும் இங்கு கல்வி கற்பிப்பதற்காக ஒரு செயலியும் உருவாக்கியுள்ளோம். இந்த செயலியால் பேச்சின் மூலமாக கையை எப்படி கொண்டு சென்று எழுத வேண்டும் என்று கற்பிக்க முடியும். இந்த செயலியை இன்னும் மேம்படுத்துவதற்காக ஆராய்ச்சிகளும் நடைபெற்று வருகிறது.

**முன்பிருந்த காலத்தில் நாம் பல்லாங்குழி ஆடுதல், கோலமிடுதல் போன்ற செயல்களை செய்தோம். அதன் மூலம் விரல்களுக்கு உடற்பயிற்சி போன்ற செயலை கொடுக்க முடிந்தது. தற்போதுள்ள காலத்தில் கணினி, கைபேசி போன்றவற்றை அதிகம் பயன்படுத்துவதால் குழந்தைகளுக்கு இந்த ஆட்டிசம் பாதிப்பு அதிகமாக ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு கைபேசி கொடுக்காமல் இருப்பது நல்லது.**

வளர்ந்த குழந்தைகளுக்கு ஸ்மார்ட் அக்ரிகல்ச்சர் என்று சொல்லப்படும் ஹைட்ரோபோனிக்ஸ் அதாவது நிலம் இல்லாத விவசாய முறையை கற்பிக்கின்றோம். இதில் விஷக்கொல்லி மருந்தெல்லாம் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது. நம் குழந்தைகளை நமக்கு பின்னால் யார் பார்த்துக் கொள்வார்கள் என்று பெற்றோர்கள் அச்சப்படுவதை தவிர்க்க நாங்கள் இந்த ஹைட்ரோபோனிக்ஸ் முறையை மேம்படுத்தும் முயற்சியில் உள்ளோம். இதன் மூலம் அந்த குழந்தைகளுக்கு வருமானம் ஈட்டும் வாய்ப்பும் உள்ளது.

ஆட்டிசம் மற்றும் டிஸ்லெக்ஸியா உள்ள குழந்தைகளின் வாழ்வு முன்னேறுவதற்காக நாங்கள் இந்த பி.எஸ்.ஜி விஷ்ணு கிராந்தி சிறப்பு பள்ளியை நடத்தி வருகிறோம். உங்கள் குழந்தைகளுக்கு இது போன்ற பிரச்சனைகள் இருப்பதாக தென்பட்டால் நீங்கள் எந்த நேரமும் எங்களை அணுகலாம் என்று பேசினார்.

# உங்களைச் சூழ்ந்திருக்கும் கர்மக் குவியலை கையாளுங்கள்!



✍ தி கோவை மெயில்

நம்மைச் சுற்றிலும் மலையளவு கர்மாவை நாம் எப்படிக் குவித்துக்கொள்கிறோம் என்பதையும், மற்றும் இதை அழிப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதையும் சத்குரு விளக்குகிறார்.

சத்குரு: சங்கரன்பிள்ளை உள்ளூர்ப் பேருந்து ஒன்றில் ஏறினார். சட்டென்று, தன் முகத்தை சால்வையால் மூடிக்கொண்டு, தன்னையே குறுக்கிக்கொண்டார். குழப்பமடைந்த சக பிரயாணி அவரிடம், "ஐயா, உங்களுக்கு என்னவாயிற்று?" என்று கேட்டார். தனக்கு எதுவும் இல்லை என்று தெளிவுபடுத்திய சங்கரன்பிள்ளை பிறகு கூறினார்," அங்கே இருக்கும் அந்த முதிய பெண்மணியை நான் பார்த்துவிட்டால், நான் எனது இருக்கையை அந்தப் பெண்ணுக்கு அளிக்க வேண்டியிருக்கும். அவரைப் பார்ப்பதைத் தவிர்ப்பதற்காகவே குனிந்துகொள்கிறேன்".

சங்கரன்பிள்ளை என்ன செய்திருக்கலாம் என்றால், எழுந்து அவரது இருக்கையை வழங்கியிருக்கலாம் அல்லது தொடர்ந்து அமர்ந்திருக்கலாம். ஆனால் ஒன்றைத் தவிர்ப்பது மிகப் பெரிய கர்மா என்பதை பெரும்பாலான மக்களும் உணராமலேயே, பல விதங்களிலும் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்கின்றனர். ஈடுபாட்டுடன் இருப்பதைத் தவிர்க்கும் கணமே, கர்மா மேலும் அதிகரிக்கிறது. "நான் என் இருக்கையை விட்டுத்தர வேண்டுமா அல்லது வேண்டாமா" என்ற மனக்கணக்கு அதைவிடப் பெரிய கர்மாவாகிறது.

பிணைப்பு தவிர்த்தல் என்னும் இந்தப் பொறியிலிருந்து ஒருவர் எப்படித் தப்புவது? இந்தக் கேள்வி பலரைக் குழப்புகிறது. குழப்பமான ஒரு நிலையில், உங்களைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொன்றும் உங்களுடன் ஒட்டிக்கொள்கின்றது! பசையினால் போர்த்தப்பட்ட உங்களுடன் ஒவ்வொரு தூசியின் துகளும் ஒட்டிக்கொள்வதைப் போன்றது இது. கர்மாவைச் சேகரிப்பது என்பது நல்லவற்றைச் செய்வதனாலோ அல்லது தீய செயல்களினாலோ விளைவதல்ல. குழப்பமான நோக்கங்கள் மற்றும் எல்லைக்குட்பட்ட ஆசைகளுடன் உங்களுக்குள்ளேயே நீங்கள் கர்மாவைக் கட்டமைத்துக்கொள்கிறீர்கள். சிறிது காலத்திற்குப் பிறகு, மூச்சு முட்டும்படியான மலையளவு கர்மாவைச் சேர்த்துவிடுகிறீர்கள்.

பெருகிவிட்ட இந்த மலையளவு கர்மாவை எப்படி ஒருவரால் தரைமட்டமாக்க முடியும்? இதற்கான எளிமையான பதில்: நீங்கள் அதை இடித்துத் தள்ள முயற்சிக்கவேண்டாம். பசையை மட்டும் நீங்கள் நீக்கினால் போதுமானது. ஒரு கணத்தில் ஒட்டுமொத்த மலையும் பிளந்து விழுந்துவிடும். இந்தப் பசையானது எப்படி நீக்கப்படுகிறது? ஒன்றைத் தவிர்ப்பதன் மூலம் அல்ல, ஆனால் விழிப்புணர்வாக ஈடுபடுவதன் மூலம் இது நிகழ்கிறது. விழிப்புணர்வான ஈடுபாடு கொள்வதனால், மீண்டும் ஒட்டிக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போகிறது.

மனித ஆசையானது எல்லைக்குட்பட்டதாகவோ அல்லது எல்லையற்றதாகவோ இருக்கமுடியும். நீங்கள் எல்லையற்றதற்கான ஆசையைத் தேர்ந்தெடுத்தால், அதுதான் கர்மாவின் முடிவு. வேறுவிதமாகச் சொல்வதென்றால், உங்கள் விருப்பு வெறுப்புகளையும், "எனது" மற்றும் "எனதல்ல" ஆகிய குறுகலான கருத்துக்களையும் கடந்து நீங்கள் வளர்ந்தால், அதுவே கர்மாவின் முடிவு.

இணைத்துக்கொள்வதை உங்களது ஆசையாகக் கொள்ளுங்கள், எல்லாவற்றையும் உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். உலகத்திற்கு ஒரு தாயாகிவிடுங்கள். அப்போது ஒட்டிக்கொள்வதற்கான வாய்ப்பு நிரந்தரமாக மறைந்துபோகிறது.

ஆன்மீகப் பாதையின் உச்சபட்ச நோக்கம், பாரபட்சமில்லாத ஈடுபாடு மற்றும் தடுமாற்றமில்லாத மனக்குவிப்பு. நீங்கள் எதனுடன் ஈடுபாடு கொள்கிறீர்கள் அல்லது எதன் மீது முனைப்பாக இருக்கிறீர்கள் என்பது பொருட்டல்ல. அது கடவுளாக, ஒரு பாறையாக, ஒரு ஆணாக அல்லது ஒரு பெண்ணாக இருக்கலாம். மனக்குவிப்புக்கு ஆளாகும் பொருள் முக்கியமில்லாதது. யோகப் பாரம்பரியத்தில் ஆகாஷி முத்திரை பயிற்சியானது ஒன்றுமற்றதின் மீது மனம்குவிக்க உதவுகிறது; அது வெற்றிடத்தின் மீதான தடுமாற்றமில்லாத மனக்குவிப்பு. முக்தி என்பது நீங்கள் மனம்குவிக்கும் பொருளைப் பொறுத்தது அல்ல, முனைப்பு மட்டுமே இங்கே முதன்மையானது.

எந்தக் குறிப்பிட்ட நோக்கமோ அல்லது கொள்கையோ இல்லாமல் ஒரு ஆழமான ஈடுபாடு கொள்ளும் உணர்வைப் பழக்கப்படுத்துவதற்கே ஒட்டுமொத்த யோகமுறையும் இருக்கிறது. காலப்போக்கில், இது விலகி நிற்பது என்ற அர்த்தத்தில் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது: ஈடுபாடு கொள்வதை பிணைப்புடனும் மற்றும் பாரபட்சமற்ற தன்மையை ஆர்வமின்மையுடனும் மக்கள் குழப்பிக்கொண்டனர். அவர்கள் மறந்துவிட்டதும், மற்றும் சங்கரன்பிள்ளை அந்தப் பேருந்தில் உணர்ந்ததும் என்னவென்றால், யாரோ ஒருவரை அலட்சியம் செய்வதற்கும்கூட மிக அதிகமான ஈடுபாடு தேவைப்படுகிறது.

வாழ்வென்னும் செயல்முறையே நோக்கமில்லாதது என்பதால், வாழ்வின் செயல்பாடுகளில் முழுமையாக ஈடுபாடு கொள்வதில் மட்டும்தான் வாழ்வின் சாரத்தை ருசிக்க முடியும். செயல்பாடுதான் நோக்கம்; இலக்கு ஒரு விளைவு மட்டுமே. மேலும் எல்லாவற்றையும் எளிமைப்படுத்துவதற்காகவே, பல பழமையான பாரம்பரியங்களும் "பக்தி" குறித்து எடுத்துரைத்தன.

பக்தி குறித்து உணர்வுபூர்வமாக எதுவுமில்லை. உண்மையான பக்தி என்னும் நெருப்பு உங்களுக்குள் எரிந்தால், அது எல்லாவற்றையும் எரித்துவிடும். இலக்கு என்ன என்பதைக் குறித்து வருத்தம் கொள்ளாமல் செயல்பாடுகளில் முழுமையாக ஈடுபடுவதில் உங்களுக்கு அது உத்தரவாதம் அளிக்கும். உங்களை விடுதலை செய்வது அனைத்தையும் இணைத்துக்கொள்ளும் பயணம்தானே தவிர, இலக்கு அல்ல. விலக்கி வைப்பதில், நீங்கள் கூண்டில் அடைபடுகிறீர்கள். இணைத்துக்கொள்வதில், நீங்கள் விடுதலை அடைகிறீர்கள். உங்களைச் சூழ்ந்திருக்கும் கர்மக் குவியலை கையாளுங்கள்!





## சைமா கட்டிடத்தில்

# ஆர்.கே.சண்முகம் செட்டியாரின் சிலையை திறந்து வைத்து வணங்கிய மத்திய அமைச்சர்

**மத்திய ஜவுளித் துறை அமைச்சர் பியூஸ் கோயல் திறந்து வைத்தார்**

**சைமா தலைவர் ரவிசாம், இந்திய ஜவுளி தொழில் கூட்டமைப்பு தலைவர் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது**



**ரவிசாம்**
தலைவர், சைமா

✍ தி கோவை மெயில்

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவையில் ஆகஸ்ட் 31ஆம் தேதி, செப்டம்பர் 1 ஆகிய இரு நாட்களில் ஆசிய ஜவுளி கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கத்தை இந்திய ஜவுளி தொழில் கூட்டமைப்பும், தென்னிந்திய பஞ் சாலைகள் சங்கமும் இணைந்து நடத்தின. இதில் இந்திய ஜவுளி தொழில் கூட்டமைப்பு தலைவராக கோவையைச் சேர்ந்த ராஜ்குமாரும், தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத் தலைவராக ரவிசாமும் பொறுப்பு வகிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோவையை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கமானது 1933ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த சங்கம் கோவையில் தொடங்கப்படுவதற்கு முயற்சி எடுத்தவர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் ஆவார். அவரே பிற்காலத்தில் சுதந்திர இந்தியாவின் முதல் நிதி அமைச்சராக பொறுப்பு வகித்தவர். 11 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட இந்த தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கமானது தற்போது 600 உறுப்பினர்களுடன் (90 ஆண்டுகளாக) இயங்கி வருகிறது.

தேவையான தொழில்நுட்பத்தை கண்டறிந்து வழிகாட்டுதல், உலக சந்தையில் போட்டியிடும் திறன், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மதிப்பு கூட்டப்பட்ட ஜவுளி பொருட்கள் உற்பத்தி ஆகியன குறித்து உறுப்பினர்களுக்கு வழிகாட்டுதல், அரசுடனும், இந்த ஜவுளித் தொழில் தொடர்புடைய மற்ற துறைகளுடனும் நல்லுறவைப் பேணுதல், சர்வதேச சூழலுக்கு ஏற்ப ஜவுளி தொழில் துறையினரை வழிநடத்துதல் ஆகியவை இந்த சங்கத்தின் நோக்கங்கள் ஆகும்.

இந்த நிலையில் "ஆசிய ஜவுளி கருத்தரங்கம்" கோவையில் நடைபெற்றது. கடந்த சில ஆண்டுகளாக ஜவுளித்துறை சிறிது தொய்வடைந்த நிலையில் இருந்து வந்தது குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விவாதிக்கப் பட்டன. கடந்த ஆண்டு கொரோனா பாதிப்பின் தொடர்ச்சி, உக்ரைன் போர், பொருளாதாரம் மந்த நிலை, அதிக வட்டி விகிதம் ஆகியவை ஜவுளித்துறைக்கு கடினமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தது என்ற போதிலும், இந்த ஆண்டு இந்தியாவின் ஜவுளித்துறை ஏற்றுமதி உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மொத்த உள்நாட்டு ஜவுளி உற்பத்தியில் இரண்டாம் இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது. ஜவுளி மற்றும் ஏற்றுமதியில் 40% சதவீத பங்களிப்பையும் வழங்கி வருகிறது.

இந்த கருத்தரங்க நிகழ்வின் ஒரு அங்கமாக ஆர்.கே.சண்முகம் செட்டியார் அவர்களின் உருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது. இந்த மாநாட்டின் சிறப்பம்சங்களாக நிலையான மேம்பாடு, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் பங்குதாரர்களை உருவாக்குதல், தொழில்முறையில் ஜவுளி உள்ளிட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்குவதற்கான போக்குகளும் வாய்ப்புகளும் குறித்த விவாதம், பிரதமரின் மித்ரா ஜவுளி பூங்கா திட்டத்தில் பங்கெடுக்க மாநிலங்களுக்கு அழைப்பு, நிலையான வளர்ச்சி காண்பதற்கு ஏத்த ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தி செய்தல், உள்நாட்டு ஜவுளி தொழிலின் போக்கு, மேம்பாடு மற்றும் புத்தாக்கம் குறித்து ஆராய்தல், நிதி சார்ந்த சிக்கல்களை நிர்வகித்தல் ஆகியவை இந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டன.

விழாவில் சிறப்பு விருந்தினராக மத்திய ஜவுளி வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சரான பியூஷ் கோயல் கலந்து கொண்டு சிறப்பித்தார். மத்திய ஜவுளி மற்றும் ரயில்வே துறை துணை அமைச்சர் தர்ஷனா விக்ரம் ஜர்தோஷ் கலந்து கொண்டார். மேலும் தமிழக கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் காந்தி, தமிழக உணவு மற்றும் பங்கீட்டுத்துறை அமைச்சர் சக்கரபாணி ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த கருத்தரங்கில் ஜவுளித்துறை சார்ந்த பல்வேறு தொழில்நுட்ப நிபுணர்களும் தொழில் துறையினரும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர் வரும் காலங்களில் இந்திய ஜவுளித் துறையின் மேம்பாட்டுக்கு இந்த கருத்தரங்கம் ஒரு முன்னெடுப்பாக திகழும் என்பதில் ஐயமில்லை!



**ராஜ்குமார்**
தலைவர், இந்திய ஜவுளி தொழில் கூட்டமைப்பு

"கம்சனிடம் இருந்து தனது தாய் தேவகி, தந்தை வாசுதேவரை காப்பாற்ற விஷ்ணு பகவான் அவதாரம் எடுத்து சுக்ல பட்ச அஷ்டம் தினத்தில் நள்ளிரவு 12 மணிக்கு தேவகி வயிற்றில் சிறையில் பிறந்தவர்தான் கிருஷ்ணர் அத்திருநாளே கிருஷ்ணஜெயந்தி









# ஒய்வில்லா பணிக்கு மகிழ்ச்சியே தாரக மந்திரம்!

– கே.ஜி.பக்தவச்சலம், தலைவர், கே.ஜி.மருத்துவமனை



கே.ஜி.செவிலியர் கல்லூரி முதல்வர் சோனியா தாஸ், கே.ஜி. பிசியோதெரபி கல்லூரி முதல்வர் மனோஜ் ஆபிரகாம், கே.ஜி. அல்லைட் ஹெல்த் சைன்ஸ் கல்லூரி முதல்வர் ஹசினா பேகம் மற்றும் கே.ஜி.ஐ.எஸ்.எல் முதன்மை செயல் அலுவலர் அரவிந் குமார் ஆகியோருக்கு சிறந்த ஆசிரியர்களுக்கான விருதுகளையும், சிறந்த நூலகர்க்கான விருதினை கதிர்வேல் ஆகியோருக்கு சிறப்பு விருந்தினர் Dr.நாராயண சாமி வழங்கினார். அருகில், கே.ஜி.மருத்துவமனையின் தலைவர் Dr. கே.ஜி.பக்தவச்சலம் மற்றும் துணை தலைவர் வசந்தி ரகு ஆகியோர்.



மாணவிக்கு பட்டத்தினை வழங்குகிறார் சிறப்பு விருந்தினர் நாராயணசாமி. உடன் கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் பக்தவத்சலம், துணைத் தலைவர் வசந்தி ரகு ஆகியோர்.

## மாதா, பிதா, குரு, மருத்துவர், தெய்வம் என்பதுதான் சரியாக இருக்கும்



கே.ஜி.ஹெல்த் சைன்ஸ் கல்லூரியின் பட்டமளிப்பு விழா சனிக்கிழமை சரவணம்பட்டியில் உள்ள கே.ஜி.ஐ.எஸ்.எல். வளாகத்தில் நடைபெற்றது.

இதில் கே.ஜி.மருத்துவமனையின் தலைவர் Dr. கே.ஜி பக்தவச்சலம் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் Dr.நாராயணசாமி கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

கே.ஜி. மருத்துவமனை பட்டமளிப்பு விழாவில் கே.ஜி.பக்தவச்சலம் பேசியதாவது,

'இந்த பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. நிறைய பட்டதாரிகளை உருவாக்கியதற்காக மட்டுமல்ல, சிறந்த மகப்பேறு மருத்துவர் எப்படி இருக்க வேண்டும் என்று கற்பித்த இக்கல்லூரி முதல்வர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். இக்கல்லூரி முதல்வர்கள், மருத்துவர்கள் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களாக மட்டுமின்றி, மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக இருந்துள்ளனர். அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு உயிர் கொடுக்கின்றனர். ஆனால் ஆசிரியர்கள் இந்த உலகையே காப்பாற்றும் சக்தியை, கல்வி செல்வமாக அந்தக் குழந்தைகளுக்கு அளிக்கின்றனர். ஆசிரியர்கள் ஏணிகளாக இருந்து தங்கள் மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவுகிறார்கள். இதனால்தான் உலகிலேயே சிறந்த தொழில் மருத்துவம் என்றாகிறது.

மாதா, பிதா, குருவுக்கு அடுத்து உயிர்களைக் காக்கும் கடவுள்கள் மருத்துவர்கள். சமதர்மம் காத்து, உயிர்களையும் காப்பாற்றும் மருத்துவப் பணி மிகவும் உயர்ந்தது.

எங்கள் கல்வி நிலையத்தில் படிப்பு 50 சதவீதம், விளையாட்டு 50 சதவீதம், கலை நிகழ்ச்சிகள் 50 சதவீதம் எனக் கற்றுக்கொடுத்து மாணவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்குகிறோம். அத்துடன் இங்கு பயிலும் மாணவர்கள் படிக்கும்போதே மருத்துவர்களைவிட அதிக சம்பளம் பெரும் தகுதியையும் பெறுகின்றனர். அதனால் இவர்கள் உலகில் எங்கு சென்றாலும், என்னவாக இருந்தாலும் வெற்றி பெறுவார்கள்' என்றார்.

## கே.ஜி. செவிலியர், பிசியோதெரபிஸ்ட் மாணவர்கள் சிறந்தவர்களாக வாழ்ந்து காட்டுங்கள்



கே.ஜி. மருத்துவமனை பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர் நாராயணசாமி பேசியதாவது, '1974 இல் மதிப்பிற்குரிய கே. கோவிந்தசாமி நாயுடு அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கே.ஜி. மருத்துவமனை, மருத்துவத் துறையில் உலக அளவில் பல்வேறு சாதனைகளைச் செய்துள்ளது. அத்துடன் ஒரு சிறந்த அறக்கட்டளையாக செயல்பட்டு மக்கள் உடல் நலத்தில் மேம்பாடு அடைய பெரும்பங்கு வகித்துள்ளது.

கே.ஜி. மருத்துவமனைத் தலைவர் பத்மஸ்ரீ கே.ஜி. பக்தவச்சலம், ஒரு சிறந்த மனிதர், சமூகப் பொறுப்புள்ளவர், சிறந்த செயல்வீரர். அவரது தலைமைப் பொறுப்பில் மருத்துவமனை நிர்வாகம் மட்டுமல்ல, மாணவர்களும் சிறந்த வகையில் கல்வியில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

கே.ஜி. ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் நர்சிங், பிசியோதெரபி கல்லூரிகள் சிறப்பான முறையில், சிறந்த மேலாண்மையின்கீழ் இயங்குகின்றன. இங்கு பயின்று பட்டம் பெரும் 220 மாணவர்களும் இன்றுமுதல் தொழில்முறை மருத்துவர்களாக தரம் உயர்ந்துள்ளீர்கள். உங்களுக்கு உலகம் முழுவதும் வேலைவாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் நர்சிங், பிசியோதெரபி மருத்துவத்திற்கு சிறந்த மதிப்பு உள்ளது.

உங்களுக்கு சமூகப் பொறுப்புணர்ச்சியுடன்கூடிய தொழில் அமைந்துள்ளது. அதனை உயர்ந்த நிலையில் கொண்டு சேர்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு. மக்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளித்து, அவர்களுக்குப் பிடித்த செவிலியர்களாகவும், பிசியோதெரபிஸ்ட்டாகவும் உயர வேண்டும். உங்கள் தொழிலில் நீங்கள்தான் உயர்ந்தவர் என்ற நிலையை உருவாக்க வேண்டும். நல்ல சமூகச் சூழலை உருவாக்கும் முயற்சியை நீங்கள் துவங்க வேண்டும். உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானுலகில் உள்ள தெய்வத்திற்கு ஒப்பாக வைத்து போற்றப்படுவான் எனும் திருக்குறள் சொல்வதுபோல் வாழ்ந்து காட்டுங்கள். நன்றி' என்றார்.





## செவிலியர்கள் இல்லாமல், மருத்துவர்கள் கிடையாது

நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்... இருக்கிறேன்... இருக்கிறேன்... நான் செய்யும் வேலையில் மகிழ்ச்சியடைகிறேன். ஆசிரியர் வேலையை கொடுத்தவர் கடவுள். எல்லாருக்கும் கல்வி தருவேன். புரியாதவர்களுக்கும் புரிய வைக்க அதிக நேரம் மகிழ்ச்சியோடு பணி செய்வேன். ஆசிரியர்கள் செய்யும் தொழில் தெய்வத்தொழில். இப்போதெல்லாம், மாதா, பிதா, குரு , டாக்டர்கள் தான் என சொல்ல வேண்டும். செவிலியர்கள், தேவதைகள். செவிலியர்கள் இல்லாமல், மருத்துவர்கள் கிடையாது. மருத்துவம் கிடையாது.

வாழ்க்கையை என்ன பிடிக்குமோ, அவ்வாறே மாற்றிக் கொள்ள வேண்டும். செயல்களை யார் மகிழ்ச்சியோடு செய்கிறார்களோ, அதுவே அவர்களுக்கு வெற்றி. சமைப்பதாக இருந்தாலும் சந்தோஷமாக செய்யுங்கள். ஆசிரியர்களாக இருந்தால், மகிழ்ச்சியோடு கற்றுக் கொடுங்கள். பிற குழந்தைகளுக்கு நன்றாக கற்றுக் கொடுங்கள். உங்கள் குழந்தை, நன்றாக வளரும்.

ஒரு செவிலியர், ஒரு பணியாளருடன் நான் மருத்துவராக இருந்து இந்த மருத்துவமனையை துவக்கினேன். தற்போது, நான் துவங்கிய இந்த மருத்துவமனையில், 350 பேர் பணியாற்றுகின்றனர். நர்சிங் கல்லூரியில் 1000 செவிலியர்கள் படிக்கின்றனர். மருத்துவம் சார்ந்த துறையில் 250 பேர் படிக்கின்றனர். 250 பிஸியோதெரபிஸ்ட் படிக்கின்றனர். வெற்றிடமாக இருந்த ஒரு இடத்தை நிரப்ப மேற்கொண்ட முயற்சியால், கே.ஜி.,நர்சிங் கல்லூரி, மருத்துவம் சார்ந்த கல்லூரி, பிஸியோதெரபி கல்லூரிகள் உருவாகியுள்ளன. தமிழ்நாட்டில் முன்னணி கல்லூரிகளாக இவை மாறியுள்ளன.

கே.ஜி,, மருத்துவம் சார்ந்த கல்லூரியில் 28 ஆண்டுகளில் படித்த 10ஆயிரம் பேருக்கும் மேற்பட்டோர் உலகம் முழுவதிலும் பணியாற்றி வருகின்றனர். கே.ஜி., காலேஜ் ஆப் ஹெல்த் சயின்சஸ், பி.எஸ்.சி நர்சிங், எம்.எஸ்சி நர்சிங், பி.எச்டி நர்சிங், பி.பிடி, எம்.பிடி. பிஎச்டி பிஸியோதெரபி உள்ளிட்ட படிப்புகள் இங்குள்ளன. இங்கு பயின்றவர்கள் உலகம் முழுவதும் பணியில் உள்ளனர்.

ஆரம்பத்திலேயே நாம் ஒரு நல்ல அடித்தளத்தை உருவாக்கியுள்ளோம். ஒழுக்கத்தை கற்றுக்கொடுத்துள்ளோம். தற்போது, மகளிர் பணிபுரியாத மருத்துவ துறையே இல்லை. அனைத்து சுகாதார துறையிலும் செவிலியர் பணியாற்றி வருகின்றனர்.





பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்ட பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள்.

Dr கே.ஜி.பக்தவச்சலம் | பிரபுக்குமார் | டாக்டர் சோனியா தாஸ் | டாக்டர் மனோஜ் இப்ரகாம் | ஹசினா

" நர்சிங், பிசியோதெரபி மருத்துவத்திற்கு உலகம் முழுவதும் வேலைவாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. உங்களுக்கு சமூகப் பொறுப்புணர்ச்சியுடன் கூடிய தொழில் அமைந்துள்ளது.

## அலைடு ஹெல்த் சயின்ஸ் மிகவும் தேவையுள்ள கல்வி

– பிரபுக்குமார், செயலாளர், கே.ஜி., காலேஜ் ஆப் ஹெல்த் சயின்ஸ்.



கேஜி கல்லூரியில் 30 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். 1994 ல் பி.எஸ்.சி நர்சிங் துவங்கப்பட்டது. நர்சிங் கல்லூரி, தமிழ்நாடு எம்.ஜி.,ஆர் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் பெற்றது. 1993ம் ஆண்டில் கோவையில் ஒரு சில நர்சிங் கல்லூரிகள் மட்டுமே இருந்தன. கே.ஜி.கல்லூரி இரண்டாவது கல்லூரியாக துவங்கப்பட்டது. பிஸியோதெரபி கல்லூரி 2007 முதல் துவங்கப்பட்டது.

தேவைகள் அதிகரித்தபோது, முதுநிலை படிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டன. மருத்துவமனைகளில் எம்.பி.பி.எஸ்., மருத்துவர்களுக்கு தேவை அதிகரித்தது. மருத்துவர்களின் பணியை குறைக்க ஹெல்த் சயின்ஸ் படிப்புகள் துவக்கப்பட்டன. ரேடியோலஜி, கிரிட்டிக்கிள் கேர் உள்ளிட்ட 10 வகுப்புகள் துவக்கப்பட்டன. அலைடு ஹெல்த் சயின்ஸ் படிக்க மிக குறைவான இடங்கள் மட்டுமே பல்கலைக் கழகம் அனுமதித்துள்ளது.

10, 20 மாணவர்கள் மட்டுமே இருப்பர். இவர்களுக்கு 3 ஆண்டுகள் படிப்பும், ஓராண்டு பயிற்சியும் அளிக்கிறோம். இது மிகவும் தேவையுள்ள கல்வி. பல்வேறு கல்லூரிகளின் இந்த படிப்புகள் துவங்கப்பட்டுள்ளன. டிப்ளமோ நர்சிங் முடித்தவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புகள் உள்ளன. இதில், 50 இடங்கள் மட்டுமே இந்த கல்லூரியில் உள்ளது.

இங்கு படித்து பணியாற்றுபவர்கள், பேச்சு வாக்கில் தரும் தகவல்களை கொண்டு இந்த படிப்பில் சேர மாணவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். அமெரிக்கா, அயர்லாந்து, வளைகுடா நாடுகள், அமெரிக்கா உள்ளிட்ட இடங்களில் வேலை வாய்ப்புகள் உள்ளன.

## கே.ஜி., பெயரை சொன்னாலே வேலை உறுதி

– டாக்டர் சோனியா தாஸ், முதல்வர், கே.ஜி.,கல்லூரி மற்றும் செவிலியர் கல்லூரி,



1998ம் ஆண்டில் கே.ஜி.,கல்லூரியில் சேர்ந்தேன். இதுவரை டாக்டர் ஜி.பி,யுடன் சந்தோஷமாக பணியாற்றி வருகின்றேன். 1993ம் ஆண்டில் கே.ஜி.,செவிலியர் கல்லூரி 20 மாணவர்களுடன் துவங்கப்பட்டது. 1998ம் ஆண்டு 100 மாணவர்களாக உயர்ந்தது. பி.எஸ்சி., நர்சிங் படிப்பு 1995ல் துவங்கப்பட்டது.

தமிழ்நாடு எம்.ஜி.ஆர்., பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்திய நர்சிங் கவுன்சில், சென்னையில் உள்ள நர்சிங் மற்றும் மிட்வைப் கவுன்சில் அங்கீகாரமும் பெற்றுள்ளது. இதில், பி.எஸ்.சி.,நர்சிங் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. டிப்ளமோ படிக்கும் மாணவியரும் பி.எஸ்.சி, படிக்க முடியும்.

2001ம் ஆண்டில் எம்.எஸ்சி நர்சிங் 8 மாணவிகளுடன் துவக்கப்பட்டது. தற்போது 5 சிறப்பு பிரிவுடன், 25 மாணவிகளுடன் இயங்கி வருகிறது. படிப்படியாக உயர்ந்து, பெரிய அளவில் உயர்ந்துள்ளது. கே.ஜி., கல்லூரி மாணவர்களை நாங்கள் நன்கு கவனித்துக் கொள்கிறோம். அவர்கள் மன மகிழ்ச்சியோடு கல்வி கற்க தேவையான உதவிகளை செய்கிறோம். இந்த கல்லூரியில் அடிப்படை கட்டமைப்புகள், பரிசோதனை குடங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

அனுபவமிக்க ஆசிரியர்கள் உள்ளனர். பயிற்சிக்கு வரும் செவிலியர், மேற்பார்வையில் நோயாளிகளுடன் பழக அனுமதிக்கப்படுகின்றனர். பயிற்சி பெரும் செவிலியர்கள் அனைத்து பிரிவிலும் பணியாற்றும் தகுதியை பெற்றிருப்பர்.

பணியாற்றவும், படிக்கவும் மிகவும் மகிழ்ச்சியான இடமாக கே.ஜி.,மருத்துவமனை, கல்வி நிலையங்கள் உள்ளன. கே.ஜி.,கல்லூரியின் பெயரை கேட்டாலே வேலை வாய்ப்பு உறுதியாகும்.

## உலக அளவில் பணியாற்றும் கே.ஜி., பிஸியோதெரபி கல்லூரி மாணவர்கள்

– டாக்டர் மனோஜ் இப்ரகாம், முதல்வர், கே.ஜி., பிஸியோதெரபி கல்லூரி.



கே.ஜி., பிஸியோதெரபி கல்லூரி, 1998ம் ஆண்டு துவங்கப்பட்டது. பி.பிடி,, 2004ல் எம்.பிடி., 2022 ல் பி.எச்டியும் துவக்கப்பட்டுள்ளது. கல்லூரியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படிப்பை முடித்துள்ளனர். இங்கு படித்த மாணவர்கள், ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பணியாற்றி வருகின்றனர். தமிழ்நாட்டில் நான்கு பேர் கல்லூரி முதல்வராக பணியாற்றி வருகின்றனர்.

தனியாக பலர் கிளினிக் வைத்து நடத்தி வருகின்றனர். விளையாட்டு வீரர்களுக்கு பிஸியோதெரபி சிகிச்சை அளித்து வருகின்றனர். சரவணம்பட்டியில் உள்ள இந்த வளாகத்தில், ஐ.டி கம்பெனிகளுடன் கல்வி பயிலுவதை மாணவர்கள் விரும்புகின்றனர். ஒவ்வொரு நாளும் புதிய சாதனைகள் நடந்து வருகின்றன.

இங்கு படிப்பு முடித்தவர்களுக்கு வளாக நேர்முகத்தேர்வுகள் நடக்கின்றன. பணியிடமும் பெற்றுள்ளனர். கல்லூரி துவங்கி 25 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. பொன்விழா கொண்டாடுகிறோம். 8 பேர் பி.எச்.டி பட்டம் பெற்றுள்ளனர்.

பல்வேறு விளையாட்டுக்கள், இலவசமாக இயன்முறை மருத்துவம் செய்து வருகிறோம். கல்வி கற்றுத்தர அனுபவமிக்க ஆசிரியர்கள் உள்ளனர். பல்கலைக்கழக அருகில் பலர் தங்கப்பதக்கம் வென்றுள்ளனர். முதுநிலை கல்வியிலும் கடந்த ஆண்டு தங்க பதக்கம் வென்றுள்ளனர்.

விளையாட்டு மட்டுமின்றி, பிற திறன்களிலும் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். சுகாதார துறையில் உலக அளவில் இவர்கள் பணியாற்றி வருகின்றனர். அமெரிக்கா, துபாய், ஆஸ்திரேலியா, சவுதியில் உள்ள பல்கலைக் கழகத்தில் பலர் ஆசிரியர்களாகவும், பயிற்றுனர்களாகவும் பணியாற்றி வருகின்றனர்.

## அனைவரையும் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்கிறார் கே.ஜி.பி.

ஹசினா, முதல்வர், கே.ஜி.,அலைடு ஹெல்த் சயின்ஸ்,



கே.ஜி.,அலைடு ஹெல்த் சயின்ஸ், 2011 ம் ஆண்டில் 5 பிரிவுகளின் கீழ் துவங்கப்பட்டது. பி.எஸ்.சி.,ரேடியாலஜி, இமேஜிங், கிரிட்டிக்கிள் கேர், ஆக்சிடென்டல் எமர்ஜென்சி பிரிவுகள் துவங்கப்பட்டன. ஆண்டுக்கு இந்த பிரிவின் கீழ் 10 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 2019ம் ஆண்டில் பி.எஸ்.சி மெடிக்கல் லெபோரட்டரி பட்டம் துவங்கப்பட்டது. தற்போது 500 மாணவர்கள் படித்து முடித்து பல்வேறு இடங்களில் பணியாற்றி வருகின்றனர்.

3 ஆண்டுகள் படிப்பு, ஓராண்டு பயிற்சி என நான்கு ஆண்டுகள் படிக்கின்றனர். பல்வேறு நாடுகளில், நல்ல வேலையில் இந்த மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். மருத்துவர்களே நேரடியாக இங்கு பாடங்களை நடத்துகின்றனர்.

பல்வேறு கருத்தரங்குகள், விழாக்களை இங்கு நடத்தி அனைவரையும் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்கிறார் கே.ஜி.,குழுமத்தலைவர். மாணவர்கள் இங்கு பணியாற்றுவதோடு, வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்புகள் பெற்று செல்கின்றனர்.

இங்கு பிற கல்லூரிகளில் நடக்கும் போட்டிகளிலும் மாணவர்கள் பங்கேற்று பரிசுகளை வென்றுள்ளனர். கல்விசாராத பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

# தர்மலிங்கேஷ்வரர் அலங்காரம்



மதுக்கரை தர்மலிங்கேஷ்வரர் கோவிலில் ஆவணி பௌர்ணமியை முன்னிட்டு சிறப்பு அலங்காரம் நடந்தது.

## இந்துஸ்தான் கல்லூரியில்
# குறுமைய விளையாட்டுப் போட்டிகள்

தி கோவை மெயில்

இந்துஸ்தான் அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரியில் பெருந்துறை குறுமைய அளவில் பள்ளி மாணவமாணவிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடந்தன.

சென்னிமலை, அம்மாபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி சார்பாக, பெருந்துறை குறுமைய அளவிலான பள்ளி மாணவ மாணவிகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் ஈங்கூரில் அமைந்துள்ள இந்துஸ்தான் அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரியில் ஆகஸ்ட் 21 முதல் 25 வரை நடந்தது. பெருந்துறை குறுமையத்திற்குட்பட்ட 80க்கும் மேற்பட்ட பள்ளிகளிலிருந்து 3000 மாணவ மாணவிகள் பங்கேற்றனர். செஸ், கேரம், டெனிகாய்ட், கபடி, கோகோ, பூப்பந்து ஆகிய போட்டிகள் நடந்தன.

இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர் சரசுவதி, நிர்வாக அறங்காவலர் பிரியா ஆகியோர் போட்டியை துவக்கிவைத்தனர். கல்லூரியின் முதல்வர் ராமன், அம்மாபாளையம் அரசு உயர் நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் குமார், பள்ளியின் பெற்றோர் ஆசிரிய கழகத்தலைவர் கதிரேசன், உடற்கல்வி ஆசிரியர் ரத்தினகுமார், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர் பிரசாந்த் ஆகியோர் பங்கேற்றனர்.



கபடி போட்டியில் விளையாடிய பள்ளி மாணவிகள்.

# பி.எஸ்.ஜி. கோப்பையை வென்றது வருமான வரித்துறை அணி




பி.எஸ்.ஜி 57வது அகில இந்திய அளவிலான ஆண்கள் கூடைப்பந்து தொடரின் சிறந்த விளையாட்டு வீரரான வருமான வரித்துறை அணியை சார்ந்த அரவிந்த் அண்ணாதுரையை கமிஷனர் பாலகிருஷ்ணன் வாழ்த்தினார். உடன் பி.எஸ்.ஜி அறநிலையத்தின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபால கிருஷ்ணன், அகில இந்திய கூடைப்பந்து டெக்னிக்கல் கமிட்டி தலைவர் நார்மன் ஐசக் மற்றும் தமிழ்நாடு கூடைப்பந்து கழக துணைத் தலைவர் பாலா உள்ளிட்டோர்.

தி கோவை மெயில்

கோவையில் நடந்த, தேசிய ஆண்கள் கூடைப்பந்து போட்டி தொடரில், சென்னை வருமான வரித்துறை அணி வெற்றிபெற்றது. பி.எஸ்.ஜி. கோப்பையுடன், ஒரு லட்சம் ரூபாய் பரிசையும் வென்றது.

பி.எஸ்.ஜி. ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் 57வது அகில இந்திய அளவிலான ஆண்கள் கூடைப்பந்து போட்டிகள் கோவை பி.எஸ்.ஜி டெக் உள்விளையாட்டு அரங்கில் ஆகஸ்ட் 26 ல் முதல் ஐந்து நாட்கள் நடந்தது.



தொடரில் இந்திய கப்பல் படை, பேங்க் ஆஃப் பரோடா, இந்திய இராணுவம், இந்தியன் வங்கி, வருமான வரித் துறை, சுங்க வரி, கேரளா மாநில மின்சார வாரியம் மற்றும் கேரளா போலீஸ் உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்றன. தொடரில் முதல் மூன்று நாட்கள் சுழல் முறையிலும் கடைசி இரண்டு நாட்கள் நாக்அவுட் முறையிலும் போட்டிகள் நடந்தன.

இறுதி சுற்றில், சென்னை வருமான வரி துறை அணியும், புதுடில்லி இந்திய இராணுவ அணியும் மோதின. மூன்றாம் இடத்துக்கான போட்டியில், லோனாவாலா இந்திய கப்பல் படை அணியும், சென்னை இந்தியன் வங்கி அணியும் மோதின. வருமான வரி துறை அணி 75 : 71 என்ற புள்ளிகளில் முதல் இடத்தைப்பெற்றது. இந்திய இராணுவ அணி இரண்டாம் இடத்தை பெற்றது. போட்டியில் வருமான வரி துறை அணியை சார்ந்த அரவிந்த் அண்ணாதுரை 26 புள்ளிகளும், அரவிந்த் முத்துகிருஷ்ணன் 22 புள்ளிகளும் பெற்றனர்.

இந்திய கப்பல் படை அணிக்கும் இந்தியன் வங்கி அணிக்கும் இடையே நடந்த போட்டியில், 79 : 72 என்ற புள்ளிகளில், இந்திய வங்கி அணி மூன்றாம் இடத்தை வென்றது. இந்திய கப்பல் படை அணி நான்காம் இடம் பெற்றது. பரிசளிப்பு விழாவில், கோவை காவல் துறை ஆணையாளர் வி. பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பரிசுகளை வழங்கினார்.

விழாவிற்கு பி.எஸ்.ஜி அறநிலையத்தின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபால கிருஷ்ணன் முன்னிலை வகித்தார். அகில இந்திய கூடைப்பந்து சம்மேளனம் துணைத் தலைவர் மற்றும் டெக்னிக்கல் கமிட்டி தலைவருமான நார்மன் ஐசக் மற்றும் தமிழ்நாடு கூடைப்பந்து கழக துணைத் தலைவர் பாலா பங்கேற்றனர்.

இந்த தொடரில் வெற்றி பெற்ற அணிக்கு 1 லட்சம் ரூபாயையும் பி.எஸ்.ஜி. கோப்பையும் வழங்கப்பட்டது. சென்னை, வருமான வரி துறை அணியை சார்ந்த அரவிந்த் அண்ணாதுரை சிறந்த விளையாட்டு வீரர் விருதையும் 10 ஆயிரம் ரூபாய் பரிசையும் பெற்றார்.

# வாழ்வில் முன்னேற நேரத்தை சரியாக பயன்படுத்துங்கள்

## பட்டிமன்ற பேச்சாளர் ராஜா பேச்சு




ஸ்ரீ ராமகிருஷ்ணா தொழில்நுட்பக் கல்லூரியில், 22 ஆவது முதலாம் ஆண்டு மாணவ மாணவியர் அறிமுக விழா நடந்தது. எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் லக்ஷ்மிநாராயணசுவாமி பட்டிமன்ற பேச்சாளர் ராஜா, கல்லூரி முதல்வர் பால்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தி கோவை மெயில்

ஸ்ரீஇராமகிருஷ்ணா தொழில்நுட்பக் கல்லூரியின் 22வது முதலாம் ஆண்டு மாணவ மாணவியர் அறிமுக விழா நடந்தது. எஸ்.என்.ஆர் சன்ஸ் சாரிடபிள் டிரஸ்டின் நிர்வாக அறங்காவலர் லஷ்மிநாராயணசுவாமி தலைமை வகித்தார். பட்டிமன்ற பேச்சாளர் ராஜா சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். கல்லூரி முதல்வர் பால்ராஜ் வரவேற்றார்.

தலைமையுரை வழங்கிய லஷ்மிநாராயணசுவாமி, "இந்தக் கல்லூரியைத் தேர்வு செய்த மாணவ மாணவியர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு மிக்க நன்றி. கல்லூரியில் உள்ள நவீன உட்கட்டமைப்பு வசதிகள், ஆய்வகங்கள் மற்றும் நூலகங்களைச் சிறப்பான முறையில் பயன்படுத்தி பல திறன்களை மேம்படுத்தி, வாழ்வின் உயரிய நிலையை மாணவர்கள் அடைய வேண்டும்," என்றார்.

பட்டிமன்ற பேச்சாளர் ராஜா பேசுகையில், " மாணவர்களின் பயணம், இலக்குகளை நோக்கி செல்வதாக இருக்க வேண்டும். நேரத்தை சரியாக பயன்படுத்தி, வாழ்வில் முன்னேற வேண்டும். சான்றோர் கருத்துக்களையும், கல்லூரியின் வசதிகளையும் சரியான முறையில் கடைப்பிடித்து முன்னேற வேண்டும்," என்றார்.

மின் மற்றும் மின்னணு பொறியியல் துறை தலைவர் ஹேமா நன்றி தெரிவித்தார்.

# ஜே.பி. சண்முகநாதனுக்கு நினைவஞ்சலி



தி கோவை மெயில்

கோவை கங்கா மருத்துவமனையின் தலைவரான ஜே.பி.சண்முகநாதனின் மறைவிற்கு நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்வு கோவை கிக்கானி மேல்நிலைப் பள்ளியில் சனிக்கிழமை நடைபெற்றது.

கோவை பாரதிய வித்யா பவனின் தலைவர் கிருஷ்ணராஜ் வானவராயரின் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சொல்வேந்தர் சுகிசிவம், டி.எஸ்.ரமணி சங்கர் மற்றும் மரபின் மைந்தன் முத்தையா ஆகியோர் கலந்துகொண்டு நெகிழ்ந்துறை வழங்கினர்.

மேலும் இந்நிகழ்வில், ஜே.பி.சண்முகநாதனின் மனைவி, குடும்பத்தினர் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸின் நிர்வாக இயக்குநர் எம்.கிருஷ்ணன், பிரிக்கால் நிறுவனத்தின் நிறுவனர் விஜய் மோகன், சிறுதுளியின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன், இயகோக. சுப்பிரமணியம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# "10 ஆண்டுகளாக நீங்கள் மிச்சர் சாப்பிட்டீர்களா"

## அ.தி.மு.க., கவுன்சிலர் மற்றும் மேயரிடையே மாமன்ற கூட்டத்தில் வாக்குவாதம்

தி கோவை மெயில்

கோவை விக்டோரியா ஹாலில், சாதாரண மாமன்ற கூட்டம் மேயர் கல்பனா ஆனந்தகுமார் தலைமையில் வியாழனன்று நடந்தது. கூட்டம் துவங்கியவுடன் உறுதிமொழி ஏற்புக்கு பின்னர், தமிழ்த்தாய் வாழ்த்து பாட மறந்தனர். கவுன்சிலர்கள் சிலர் சுட்டிக் காட்டிய பின், தமிழ்த்தாய் வாழ்த்து பாடினர். கூட்டம் துவங்கியதும், மாநகர பகுதிகளில் பணிகள் மந்தகதியில் நடப்பதாக அ.தி.மு.க., கவுன்சிலர்கள் குற்றம் சாட்டினர்.

இதில், கவுன்சிலர் பிரபாகரனுக்கும், மேயருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. மாநகராட்சி கூட்டம் தாமதமாகத் துவங்கியதாகக் கூறிய அ.தி.மு.க., கவுன்சிலர் பிரபாகரன், "மிச்சர் சாப்பிடுவதற்காக மாநகர மன்றத்திற்கு வருகிறோம், "என காட்டமாக எழுப்பினார். அதற்கு 10 ஆண்டுகளாக நீங்கள் மிச்சர் சாப்பிட்டீர்களா என மேயரும் பதிலுக்குப் பேசினார். இதனால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் நீண்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

திமுக கவுன்சிலரும், மத்திய மண்டல தலைவருமான மீனாலோகு, மத்திய மண்டலத்திலிருந்து அனுப்பப்படும் கோப்புகளை, மேயர் உள்நோக்கத்துடன் நிறுத்தி வைப்பதாகக் குற்றம் சாட்டினார். மேயர் கல்பனாவிற்கும் தி.மு.க., மண்டல தலைவர் மீனாலோகுவிற்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

"அ.தி.மு.க., ஆட்சியில் கவுன்சிலராக இருந்த போது கூட மரியாதையாக நடத்தினார்கள், இப்போது வன்மத்துடன் மேயர் செயல்படுவதாகவும் கூறி மீனா லோகு, வெளிநடப்பு செய்ய வெளியேற முயன்றார். அவரை தி.மு.க., கவுன்சிலர்கள் சமாதானப்படுத்தி அமர வைத்ததுடன், "மண்டல தலைவரின் கோரிக்கைகளை மேயர் கல்பனா செயல்படுத்த வேண்டும்" என வலியுறுத்தினர். தி.மு.க., மண்டல தலைவரே தி.மு.க., மேயரை எதிர்த்து வெளிநடப்பு செய்ய முயன்றது சக தி.மு.க., கவுன்சிலர்களிடையே சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.




மாமன்ற கூட்டத்தில் போராட்டம் நடத்திய அ.தி.மு.க., கவுன்சிலர்கள்

# ஒவ்வொருவரின் வளர்ச்சியும் ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி

தி கோவை மெயில்

கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் 14 ஆவது பட்டமளிப்பு விழா புதன் அன்று நடந்தது. பல்கலைக்கழகத்தின் வேந்தர் இராமசாமி தலைமை வகித்தார். கற்பகம் கல்விக்குழுமங்களின் தலைவர் வசந்தகுமார் முன்னிலை வகித்தார். தமயந்தி வசந்தகுமார், முதன்மைச்செயல் அலுவலர் க.முருகையா, துணைவேந்தர் வெங்கடாசலபதி, பதிவாளர் இரவி, தேர்வாணையர் ப.பழனிவேலு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முதன்மை விருந்தினராக பங்கேற்ற புதுதில்லி சி.எஸ்.ஐ.ஆர்.அமைப்பின் இயக்குநரும், டி.எஸ்.ஐ.ஆர்.அமைப்பின் செயலாளருமான கலைச்செல்வி மாணவர்களுக்குபட்டங்ளை வழங்கி பேசியதாவது:

ஒவ்வொரு தனி மாணவனின் கல்வியும், சமுதாயத்தை முன்னேறச் செய்ய வேண்டும். கற்ற கல்வியின் பயனாக நாட்டில் அமைதியை இளைஞர்கள் நிலைநிறுத்த வேண்டும். வெளிநாடுகளுக்கு சென்று வேலை பார்த்தாலும், இந்தியாவின் கலாச்சாரம், மரபுசார் அறிவின் அடையாளம் என்பதை உலகுக்குச் சொல்ல வேண்டும். உன்னத உழைப்பின் அடையாளமாகவே சந்திராயன் திட்டத்தின் வெற்றியைக் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு தனிமனிதனின் வளர்ச்சியும் ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி என்கிற நோக்கில், அயராத உழைப்பால் நாட்டை உயர்த்துவோம் என்று பேசினார்.

விழாவில் 2594 மாணவர்கள் பட்டம்பெற்றதோடு 46 மாணவர்களுக்குத் தங்கப்பதக்கங்களும், பல்வேறு துறைகள் சார்ந்த ஆய்வாளர்கள் 18 பேருக்கு முனைவர் பட்டமும் வழங்கப்பட்டன.

# பெண்களுக்கான பிரத்தியேக "ஆடை" ஷோரூம் திறப்பு



மும்பை, டெல்லி, சூரத் போன்ற வெளி மாநிலத்திலிருந்து பெங்களூரு மற்றும் சென்னையில் ஆடைகள் அறிமுகமாகும் முன்பே, கோவை மக்களிடம் விரைவாகச் சேர வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. ”

✍ தி கோவை மெயில்

கோவை ஆர்.எஸ்.புரத்தில் "ஆடை" என்ற பெண்களுக்கான பிரத்தியேக கிளோதிங் ஷோரூமை கொங்குநாடு கல்லூரி செயலாளர் சி.ஏ.வாசுகி பரமசிவம் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். டவுன் – சிட்டி டெவலப்பர்ஸ் கே.ஜி. குழுமம் சஞ்சனா விஜயகுமார், சஹுவால புளோர் மில்ஸ் பர்நிகா குப்தா, கருணாநிதி கன்ஸ்டிரக்சன் நிர்வாக இயக்குநர் கருணாநிதி, சித்ரா கருணாநிதி, ஆடை ஷோரூம் நிர்வாக இயக்குநர் சிந்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆடை ஷோரூம் குறித்து கருணாநிதி கன்ஸ்டிரக்சன் நிர்வாக இயக்குநர் கருணாநிதி கூறுகையில், " பெண்களுக்காகவே தரமான ஆடைகளை விற்பனை செய்ய இந்த ஆடை ஷோரூம் துவங்கப்பட்டுள்ளது. நடுத்தர, மேல் வகுப்பு மக்களுக்காக ஆர். எஸ். புரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஷோரூமின் உள் வடிவமைப்புகள், வாடிக்கையாளர்களை கவரும் விதமாக அமைக்க திறன்மிக்க பெங்களூரு வடிவமைப்பாளர்களால் இது உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு ஆயிரம் ரூபாய் முதல் 25 ஆயிரம் வரை ஆடைகள் உள்ளன. மும்பை, டெல்லி, சூரத் போன்ற வெளி மாநிலத்திலிருந்து பெங்களூரு மற்றும் சென்னையில் ஆடைகள் அறிமுகமாகும் முன்பே, கோவை மக்களிடம் விரைவாகச் சேர வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய பிரத்தியேக ஆடைகளையே இங்கு விற்பனை செய்கிறோம். கோவை மக்கள் பயன்பெற அழைக்கிறோம்," என்றார்.



"ஆடை" ஷோரூம் திறப்பு விழாவில் கலந்துகொண்ட கொங்குநாடு கலை கல்லூரியின் செயலாளர் சி.ஏ.வாசுகி டாக்டர் பரமசிவம், டவுன் – சிட்டி டெவலப்பர்ஸ் கே.ஜி. குழுமம் சஞ்சனா விஜயகுமார், சஹுவால புளோர் மில்ஸ் பர்நிகா குப்தா, கருணாநிதி கன்ஸ்டிரக்ஷன் நிர்வாக இயக்குநர் கருணாநிதி மற்றும் அவரது மனைவி சித்ரா கருணாநிதி, ஆடை ஷோரூம் நிர்வாக இயக்குநர் சிந்து ஆகியோர்.



முதல் விற்பனையை துவக்கி வைக்கிறார் கொங்குநாடு கல்லூரி செயலாளர் சி.ஏ.வாசுகி பரமசிவம்.

# ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் வரவேற்பு விழா




பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த மாணவருக்கு எஸ்.என்.ஆர்.சன்ஸ் சாரிடபிள் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாரயணசுவாமி சான்றிதழும் பரிசும் வழங்கினார். அருகில் சிறப்பு விருந்தினர் கோவை, காக்னிசன்ட் டெக்னாலஜி மூத்த இயக்குநர் ஜெயகிருஷ்ணன் அப்புசாமி, கல்லூரி முதல்வர் அலமேலு ஆகியோர்.

✍ தி கோவை மெயில்

ஸ்ரீராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழா மற்றும் புத்தாக்க பயிற்சி விழா நடைபெற்றது.

விழாவிற்குக் கல்லூரி முதல்வர் அலமேலு அனைவரையும் வரவேற்றார். எஸ்.என். ஆர்.சன்ஸ் சாரிடபிள் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாரயணசுவாமி தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராகக் கோவை காக்னிசன்ட் டெக்னாலஜி மூத்த இயக்குநர் ஜெயகிருஷ்ணன் அப்புசாமி பங்கேற்று, முதலாம் ஆண்டு மாணவர்களை வாழ்த்தி பேசுகையில், " தொழில்நுட்ப மாற்றத்தை மாணவர்கள் வரவேற்க அதிக ஆர்வம் காட்ட வேண்டும். கூட்டு முயற்சியே வெற்றி பெற வைக்கும். ஆராய்ச்சி முயற்சியில் தோல்வியடைந்தாலும், துவளாமல் இருக்க வேண்டும்," என்றார்.

இக்கல்லூரியில் 1995-1999 கல்வி ஆண்டில் பயின்ற முன்னாள் மாணவர்களான திருவனந்தபுரம் ஐரோசியா பீம் சர்வீசஸ் டெக்னாபார்க் துறையின் பொது மேலாளர் பாபு கோபாலகிருஷ்ணன், பெங்களூரு சிஸ்கோ நிறுவனத்தின் மூத்த பொறியியல் மேலாளர் ராஜேஸ்வரி ராஜன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக பங்கேற்றனர். மாணவர்கள், எவ்வாறு நான்கு ஆண்டு படிப்பை, திறம்பட எதிர்கொள்ள வேண்டும், பல்வேறு நிறுவனங்கள் தங்களின் எதிர்பார்ப்பு எவ்வாறு உள்ளது என்பதையும் தெளிவாக விளக்கினர்.

இரண்டாம் நாள் விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக இஷ்ட் எப் குழுவின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு துறைத் தலைவர் ஸ்ரீனிவாசன் நாயுடு, கௌரவ விருந்தினராகப் பெங்களூரு என்கோரா இன்னோவேஷன்ஸ் லேப் இன் சீனியர் அர்கிடெக்ட் நாராயணன் கலந்துகொண்டனர்.

# இந்துஸ்தான் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

✍ தி கோவை மெயில்

இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 21வது பட்டமளிப்பு விழா ஏ.பி.ஜே அப்துல் கலாம் கலையரங்கில் சனிக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரி முதல்வர் பொன்னுசாமி வரவேற்புரை அளித்தார். கல்லூரியின் முதன்மைச் செயல் அலுவலர் கருணாகரன் மாணவர்கள் கல்வி அறிவுடன், சமூகப் பொறுப்பையும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதனைத் தனது உரையில் எடுத்துரைத்தார். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக அறிவியல் அறிஞர் மற்றும் டி.பி.டி நட்சத்திர அந்தஸ்து குழுவின் அலகுப் பிரிவு மற்றும் மனிதவள மேம்பாட்டு நிகழ்வுகளின் தலைவர், உயிரிதொழில் நுட்பவியல் துறை சார்ந்த கரிஷ்மா குப்தா கலந்து கொண்டு சந்திராயன்3 விண்கல வெற்றியை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டு, ஒழுக்கமும், கல்வியும் மாணவர்களைச் சாதனை படைக்கச் செய்யும் எனத் தெரிவித்தார்.

மேலும், இந்துஸ்தான் கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் பேசுகையில், கல்வி மனிதனைச் சமூகத்தில் உயர்வான நிலைக்கு எடுத்துச் செல்லும், மாணவர்கள் வாழ்வின் படிநிலைகளில் மேன்மை பெறவேண்டும் என்பதனை எடுத்துரைத்தார். கல்லூரியின் நிர்வாகச் செயலர் பிரியா மாணவர்களுக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

கல்லூரியின் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பாபு கிருஷ்ணராஜ் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்குப் பரிசும் பட்டங்களையும் வழங்கிட அறிவுறுத்தினார். இதனை அடுத்து பல்துறை மாணவர்களுக்குப் பட்டங்கள் வழங்கி கௌரவித்தனர்.



மாணவிக்கு பட்டத்தினை வழங்குகிறார் அறிவியல் அறிஞர் கரிஷ்மா குப்தா. உடன் இந்துஸ்தான் கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், செயலாளர் பிரியா சதிஷ்பிரபு, இந்துஸ்தான் கல்வி நிறுவங்களின் முதன்மை செயல் அதிகாரி கருணாகரன் மற்றும் முதல்வர் பொன்னுசாமி.

# வழக்கு பகுப்பாய்வு போட்டி



டாக்டர் என்.ஜி.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், சர்வதேச வணிகவியல் துறை மற்றும் யங் இந்தியன்ஸ் சிஐஐ உடன் இணைந்து சர்வதேச அளவிலான வழக்கு பகுப்பாய்வு போட்டியை வியாழக்கிழமை ஏற்பாடு செய்தனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக ஈசா கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி அஜித்மூர்த்தி மற்றும் ஜிட்ராப் இணை இயக்குநர் விஷ்ணு கலந்து கொண்டனர். வணிகவியல் துறை தலைவர் பானுதேவி தலைமையுரை நிகழ்த்தினார். இதில் 250க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு மாநிலங்களில் இருந்து கலந்துகொண்டனர். வெளிநாடுகளிலிருந்து வழக்குகள் சமர்ப்பிக்கபட்டன. இந்த போட்டியின் மூலம் மாணவர்கள் பயனடைந்து வழக்கு பகுப்பாய்வு தொடர்பான விழிப்புணர்வைப் பெற்றனர்.

# ஊதா நிறத்திற்கு மாறுகிறது ஆவின் பால் - கோவை மாவட்ட ஆட்சியர்

✍ தி கோவை மெயில்

பச்சை நிற ஆவின் பால் பாக்கெட் ஊதா நிறத்தில் விநியோகம் செய்யப்பட உள்ளதாக கோவை மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மூலம் கடந்த 01.02.2023 தேதி முதல் நாளது தேதி வரை ஆவின் பசும்பால் *COW MILK (3.5 FAT - 8.5 SNF)* என்ற பெயரில் *250ml, 500 ml* ஆகிய அளவுகளை கொண்ட பால் பாக்கெட்டுகள் பச்சை நிற வண்ணத்தில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.



வரும் 6ம் தேதி முதல் அனைத்து மாவட்ட ஒன்றியங்களிலும் ஒரே வண்ண பாக்கெட்டுகளை அறிமுகம் செய்யும் வகையில், ஆவின் சிளிகீ விமிலிரி *(3.5FAT - 8.5 SNF)* என்ற பெயருக்கு பதிலாக ஆவின் டிலைட் *(Aavin delight) (3.5FAT-8.5 SNF)* என்ற பெயரில் ஊதா நிற *(purple)* பால் பாக்கெட்டுகளில் விநியோகம் செய்யப்படவுள்ளது.

மேலும் பாலின் கொழுப்பு மற்றும் இதர சத்துகளில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆதலால், இந்த ஆவின் டிலைட் *(Aavin delight-3.5% FAT-8.5% SNF)* ஊதா நிற **(purple)** ஆவின் பால் பாக்கெட்டுகளை பொதுமக்கள் வாங்கி பயனடையலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.




# Journalism is a 360-degree learning journey

*- Jeshi, Deputy Editor, The Hindu*

✍ The Covai Mail



*Sasikala, Head of the Mass Communication Department, Jeshi, Deputy Editor, The Hindu, RJ Srinivas, Suriyan FM with the students of various schools who received prizes in the online competitions conducted by Dr GRD College of Science.*

The School of Communication at Dr. GR Damodaran College of Science recently organized "TRIDENT," an online competition in commemoration of India's 77th Independence Day. This event saw enthusiastic participation from over 700 students, not only from Coimbatore but also from various districts across Tamil Nadu.

It featured an array of engaging contests including digital poster making, craft making, reels production, and photography, catering to both junior (9th and 10th grade) and senior (11th and 12th grade) categories. The School of Communication subsequently hosted "The Tides of Hope," a career counselling program for school students on September 2, 2023, at the college premises.

This event was graced by distinguished guests such as Jeshi, Deputy Editor and in-charge of Metroplus editions at The Hindu (Coimbatore, Madurai, and Trichy), and RJ Srinivas, Cluster Programme Producer, Controller of Coimbatore and Erode Suriyan FM.

The Welcome address was delivered by Sasikala, Head of the Department. The 77th Independence Day was celebrated with great fervour, focusing on the theme 'Nation First, Always First.' Sasikala, highlighted India's remarkable post-independence progress, stating, "We see many developments and achievements in India that show its growing significance globally." The event was part of the 'Azadi ka Amrit Mahotsav' celebrations.

In her speech, Journalist Jeshi discussed the prospects within journalism. She stressed that "journalism is a 360-degree learning journey, starting with reading, then writing, and ultimately production." Jeshi advocated completing a journalism course to establish a solid foundation to prepare for this field." Reading habits were highlighted for their role in enhancing awareness, vocabulary, and communication confidence.

She underlined the journalist's responsibility by saying "Journalists gather and verify information, ensuring credibility and accuracy. Our role is to empower readers with credible news". Jeshi emphasized that journalism fosters diverse skills, ultimately transforming individuals into skilled storytellers across various platforms. In a captivating speech, RJ Srinivas, discussed radio's evolution in the digital age.

He emphasized how radio has transformed, including the rise of podcasts, enabling everyone to share their voices. Srinivas shared the historical significance of radio in conveying India's independence to remote villages and praised the role of old newspapers like 'Nava India' in Coimbatore for disseminating vital information in earlier times.

He urged students to interact with elders, gaining knowledge beyond books. Highlighting radio's creative potential, he also highlighted career opportunities but stressed the importance of completing journalism or mass communication courses for a strong foundation.

Approximately 450 students attended the event. A total of Two lakh and Eighty-one Thousand in cash prizes were awarded to 104 winners of the competitions. The event was not only intellectually stimulating but also entertaining, featuring cultural performances that included music, dance, and a captivating band performance.



# Immediate Action Needed for this Critical Concern

*- Vanitha Mohan, Managing Trustee, Siruthuli*

✍ The Covai Mail

"Rich evidence was discovered on the banks of the Noyyal River, indicating a history of international trade, metallurgy, yarn, urban settlements, ancient coins, and pearls dating back 3000 years," stated C R Elangovan, a renowned writer and historian. He shared these insights during the "Noyyalil Nalla Thanni" conclave at the Noyyal Peruvizha – 2023, held at Perur Adheenam Thirumadam.

The conclave aimed to raise awareness about water contamination in the water bodies of the Noyyal River Basin, especially among students. It was a collaborative effort by Siruthuli, Perur Adheenam, and Noyyalaru Trust. Vanitha Mohan, Managing Trustee, Siruthuli said that any threat to River Noyyal is a challenge to mankind. She remarked, "Since 2003, Siruthuli has been dedicated to tackling water conservation issues.

The unchecked rise of industrialization and urbanization has led to the distressing contamination of surface water and groundwater. Urgent attention and collective action from all stakeholders are imperative to address this critical concern." The event featured a panel discussion with experts including Maheshwari, Head of Department, Environmental Sciences, TNAU, Rajagopal, Junior Engineer, PWD, Manikandan from Kovai Kulangal Pathukappu Amaippu, and Krishnaswamy, Convenor, Water Watch Siruthuli. The discussion was moderated by Sathish, Trustee of Siruthuli.

A total of 328 students from various colleges participated, including PSG College of Arts and Science, Dr. NGP College of Arts and Science, Avinashilingam College of Home Science, Kumaraguru College of Arts and Science, and Sri Sai Ranganathan College of Arts and Science.

## Toyota's 5-Year Free Roadside Assistance Program

✍ The Covai Mail


Toyota Kirloskar Motor (TKM) introduces a complimentary 5-year Roadside Assistance Program for new vehicle purchases, reinforcing its commitment to customer satisfaction. The initiative offers more than just breakdown support; it provides assurance, convenience, and security to Toyota owners.

This program includes services like vehicle towing for breakdowns and accidents, battery jump-starts, tire puncture repairs, fuel assistance, and arranging taxis for up to 50 km. Notably, the 'Find Me' feature allows quick tracking during emergencies.

The digitalized process enhances efficiency, and the Vehicle Custodian Service offers immediate assistance at the location. TKM's customer-centric approach and focus on Quality, Durability, and Reliability underscore its dedication to enriching customer experiences since the program's launch in 2010.

# *Natyanjali's* 26th Edition Enthralls Coimbatore

✍ The Covai Mail



*The Captivating Bharatanatyam and Kuchipudi performances*



The 26th edition of Natyanjali Festival organized by Rotary Club of Coimbatore Metropolis started on 1st September and will ends today (3rd September, 2023). This festival, which has been a cultural staple for the past 25 years, has traditionally been held at the ancient Perur Temple, also known as Melai Chidambaram.

However, this year, the venue has been shifted to the Sarojini Nataraj Auditorium at Kikani High School to accommodate a wider audience. Natyanjali aims to promote and popularize various Indian dance forms among people from all walks of life. The festival had three evenings of captivating performances by more than 70 artistes, ranging from students of local dance schools to renowned performers.

Over the years, Natyanjali has hosted legendary dancers such as Padma Subaramaniam, Sudharani Raghupathy, Chitra Visveswaran, Dhananjayans, Alarmel Valli, Malavika Sarukkai, Vempati Chinna Satyam, Sonal Mansingh, Deepika Reddy, and others.

This year, the Rotary Club of Coimbatore Metropolis orchestrated the 26th edition of the festival in a grand manner under the convenorship of Gurumurthy. The program featured a diverse lineup of performances such as leading artistes showcased Bharatanatyam and Kuchipudi performances on the inaugural day.

Accomplished dancers presented ensemble group performances on the second day and the festival concludes today with a jugalbandi of Odissi and Bharatanatyam, followed by a dance drama titled "Tiruchendur" presented by the Karuna Sagari group. What's remarkable is that entry to the Natyanjali festival was free, ensuring that a wide range of audiences, from college students to prominent figures in Coimbatore, enjoyed these mesmerizing dance forms.

Additionally, the Rotary Club of Coimbatore Metropolis is deeply committed to various community-oriented projects in and around Coimbatore.

Some of their signature projects include "Hope After Fire," "Breast Cancer Awareness and Treatment," "Walk for Life" (which focuses on diabetic foot care screening and treatment), and the construction of a toilet block for disabled athletes at Ramakrishna Mission Vidyalaya, valued at Rs 50 lakhs. These initiatives were carried out free of cost for deserving patients and athletes, reflecting the club's dedication to making a positive impact on the community.

# PSG's iTech Hackfest 2023 Concludes

✍ The Covai Mail



*The Chief Guest Ferose presented the cash prize cheque of Rs.1,50,000 to Team Code Crusade from Sri Krishna College of Engineering and Technology.*

The valedictory function of the iTech Hackfest 2023 was held recently at PSG Institute of Technology and Applied Research. The event was graced by the presence of Ferose, Senior Vice-President and Head of SAP Academy for Engineering, as the Chief Guest.

In his address, Ferose highlighted the importance of events like the iTech Hackfest in nurturing innovation and talent. He also emphasized the need to cultivate hackathon ideas and transform them into startups.

Ferose also spoke about SAP's commitment to diversity and inclusion. He cited the company's "Autism at Work" initiative and the "All India Inclusion Summit" as examples of its efforts to create an inclusive workplace.

The event also saw the announcement of the winners of the iTech Hackfest 2023. The top team, Code Crusade from Sri Krishna College of Engineering and Technology, won a cash prize of Rs. 1,50,000. The second-place team, Farmlink from Sri Sairam Institute of Technology, won a cash prize of Rs. 1,00,000. The third-place team, Kanya Rasi from KL University, won a cash prize of Rs. 50,000.

The success of the iTech Hackfest 2023 is a testament to the power of collaboration, dedication, and innovation. The event was a great success and it is sure to inspire many more young minds to pursue their dreams of innovation.

## KMCH Nursing College's Protocol and Standards Workshop

✍ The Covai Mail

KMCH College of Nursing recently organized a Continuing Nursing Education event on "Nursing Practice Standards and Infection Control Protocols" for B.Sc (N) final year, P.B.BSc (N) II year, and M.Sc (N) II Year students. The course aimed to bolster nursing practice standards and infection control protocols.

In the inaugural address, Prof. Madhavi stressed the importance of Nursing Practice Standards. Muthusami, Head Quality Initiatives & Chief Biochemist shared insights into NABH, while Prof. Jayalakshmi heightened knowledge on infection control protocols.

Mohanambal, Nursing Director delved into Nursing Practice Standards, and Arunadevi, Nurse Educator, explained Nursing Audit. Prof. Malarvizhi, Vice-Principal discussed about Patient Safety, and Prof. Renuka addressed Legal & Ethical issues in Nursing Practice.

With 131 nursing students benefiting, this initiative enhances the application of Nursing Practice Standards and infection control protocols in real-world clinical scenarios, boosting the quality of nursing care.

## Tata Nexon Cars Participate in SGA Go Green EV Rally

✍ The Covai Mail

Tata Motors and SGA Cars jointly organized a Rally for Tata Nexon cars titled "SGA Go Green EV Rally" from SGA Motors Singanallur Showroom to Black Thunder Water Theme Park, Mettupalayam on 26th August.

More than 25 Tata Nexon cars participated in the rally, along with over 100 customers and their families. The event was graced by the Chairman of SGA Motors, S. Arputharaj, the South Manager of Tata EV Cars, and the members of SGA Motors.

## Sony Introduces Interchangeable-Lens Vlog Camera

✍ The Covai Mail

Sony has introduced the ZV-E1, a flagship vlog camera with an interchangeable lens system, featuring a powerful 35mm full-frame image sensor.

The camera, designed for content creation, utilizes Sony's E-mount and advanced technology to provide high-quality imagery with low noise and high sensitivity. This included a shooting grip with a wireless remote commander, battery charger, and a soft carrying case. This offer is available for a limited time.

Key features of the ZV-E1 include advanced image processing, a full-frame back-illuminated sensor for superior quality, cinematic vlog settings, an AI processing unit with tracking and recognition capabilities, stable vlogging performance, advanced audio features, efficient editing capabilities, a flexible touch LCD screen, smartphone connectivity, high-quality live streaming, and a focus on sustainability.

The ZV-E1 camera is available in various stores in India, priced at Rs. 243,990/- for the ZV-E1L variant (including a 28-60mm zoom lens) and Rs. 214,990/- for the ZV-E1 body-only option.

## Fastrack Launches 'Be Both' Campaign with Vijay Deverakonda

✍ The Covai Mail

Fastrack, India's renowned watch and accessories brand, has launched its new brand campaign titled 'Be Both', resonating with the youth's ability to embrace contradictory ideas and attitudes effortlessly.

The campaign features youth icon Vijay Deverakonda as the brand ambassador. The campaign showcases various fashion contradictions like "Subtly Dramatic," "Seriously Playful," and "Prim and Improper," encouraging young individuals to confidently exhibit their contradictions.

The campaign introduces a collection of 15 unique watches that blend opposing elements in design. The Fastrack #BeBoth collection includes a range of watches for both young men and women, with prices ranging from Rs 2995 to Rs 9995/-. Ajay Maurya, Head of Marketing and Product at Fastrack, emphasized the importance of youth's contradictions and authenticity.

Vijay Devarakonda expressed his enthusiasm for the campaign's celebration of individuality and unique expression. The collection is available in various stores and online platforms.

*To Advertise in*
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan